**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No. C.C. No. 122-2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: | P.W-1 , LW 1cross |
| Name | : மோகன் | Defence | : |
| Father Name | : நாராயணசாமி | Court | : |
| Village | : அகணி | | |
| | | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : 52/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 14.08.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். கொத்தானர் வேலைக்கு செல்வதால் எனக்கு மதுப்பழக்கம் உண்டு என்றால் சரிதான். என் பெற்றோர் ஒரு தெருவிலும் நான் பக்கத்து தெருவிலும் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று காலையில் எனக்கு சம்பவம் பற்றி கேள்விபட்டு தான் தெரியும் என்றால் சரிதான். எதிரிக்கும் எனக்கும் வேலி பிரச்சனை தொடர்ந்து உண்டு என்றால் சரிதான். குப்பையை எந்த இடத்தில் கொட்டினார்கள் என்றால் எங்கள் வேலி ஓரமாக கொட்டினார்கள். எங்கள் இடத்தில் குப்பையை கொட்டி இருந்தால் எந்த பிரச்சனையும் எழுவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரிதான். காலையில் நடந்த சம்பவத்தை இரவில் என்னிடம் என் அம்மா போனில் கூறினார்கள். போலிசார் விசாரணையில் நான் என் மருமகள் என்னிடம் கூறியதாக கூறியிருந்தால் அது பொய் என்றால் சரியல்ல. சம்பவம் 7.00 மணக்கு நடந்தது. எதிரி பாரிவேந்தன் வீட்டில் உட்கார்ந்திருந்தபோது நான் சென்று கேட்டேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்தது எதிரி வீட்டு வாசலில் என்றால் எங்கள் வீட்டு வாசலிலும் நடந்தது. போலிசார் வாக்குமூலத்தில் எதிரி வீட்டு வாசலில் தான் சம்பவம் நடந்தது என்று நான் கூறினேன் என்றால் இரவு நடந்த சம்பவம் எதிரி வீட்டு வாசலில் நடந்தது.

சம்பவத்தின்போது எத்தனை நபர்கள் வேடிக்கை பார்த்தனர் என்றால் 10 நபர்கள். சந்திரா வீடு, மதியழகன் கூறை வீடு பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். அவர்களுக்கு சம்பவம் பற்றி தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்து முடிந்த பிறகுதான் என் மகன் சிவா என்னை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வந்தார் என்றால் சரிதான். சம்பவம் பற்றி சிவாவுக்கு நேரடியாக தெரியாது என்றால் கடைக்கு போயிருந்தார். சம்பவத்தின்போது நான் டாக்டரிடமும் போலிசாரிடமும் அரிவாள், கத்தி, கடப்பாரை, இரும்பு கம்பி, ஆகியவற்றால் தாக்கியதாக சொன்னேன் என்றால் சரிதான். நான் போலிசாரிடம் ஒரு ஆயதத்தால் தாக்கியதாகவும் மருத்துவரிடம் வேறொரு ஆயுதத்தால் தாக்கியதாகவும் கூறினேன் என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் இத்தனை ஆயுதத்தால் எதிரி ஒரே நேரத்தில் என்னை தாக்க முடியாது என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் எதிரி ஒரே ஆயுதத்தால் தான் என்னை தாக்கியிருப்பார் என்றால் சரியல்ல. சண்டை சம்பவம் சுமார் 20 நிமிடங்கள் நடந்தது. சம்பவ இடத்திற்கும் மருத்துவமனைக்கும் 3 கி.மீ. தூரம் இருக்கும் என்றாலும் 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றாலும் சரிதான். நான் மயங்கி இருந்ததால் என்னை மருத்துவமனைக்கு தெருவில் உள்ளவர்கள் அழைத்து சென்றார்கள். மயக்கமாக இருந்ததால் யார் என்னை அழைத்து சென்றார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. மருத்துவரிடம் சண்டை பற்றிய விவரம் கூறியது தெருவில் உள்ளவர்கள் தான். அதன்பிறகு தான் எனக்கு மயக்கம் தெளிந்தது என்றால் சரிதான். போலிசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள். மறுநாள் காலை வீட்டில் வைத்து விசாரித்தார்கள். போலிசாரிடம் புகார் வாக்குமூலம் நானும் என் அப்பாவும் கொடுத்தோம். வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை, சொன்னதை எழுதிக்கொண்டார்கள். அதில் உள்ள விவரம் தெரியாது . மருத்துவரிடம் யார் என்னை தாக்கினார்கள் என்று பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான், எதிரி வெளிநாடு செல்ல முயற்சி செய்வதாலும் அவர் வெளிநாடு சென்று அதிகமாக வருமானம் ஈட்டிவிடுவார் என்ற கெட்ட எண்ணத்தில் அதை தடுப்பதற்காக அன்றிரவு நான் மதுபோதையில் கரணை போன்ற ஆயுதங்களுடன் எதிரியின் வீட்டிற்கு வந்து எதிரியை தாக்க முயன்றபோது எனக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் அதை தடுக்க முற்பட்டபோது எனக்கும் என் தந்தைக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டு என் தந்தைக்கும் நான் காயம் ஏற்படுத்தினேன் என்றாலும் சரியல்ல. எனக்கும் என் தந்தைக்கும் ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்றால் சரியல்ல.

நான் சீர்காழி, சிதம்பரம், தஞ்சாவூர் போன்ற மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்து கொண்டேன். சிகிச்சை எடுத்து கொண்ட விவரத்தை போலிசாரிடம் சொன்னேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் சாட்சிகள் அனைவரும் என் அப்பா, என் மகன். என் மகனின் நண்பர்கள். பக்கத்தில் உள்ள வீடுகளில் உள்ளவர்கள் யாரும் சாட்சியாக இல்லை என்றால் சரிதான். சம்பவம் உண்மையாக இருந்தால் அவர்கள் சாட்சியாக சேர்க்கப்பட்டிருப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரி வெளிநாடு செல்லக்கூடாது என்பதற்காக கொடுக்கப்பட்ட பொய்யான புகார் இது என்றால் சரியல்ல. இரவு 7.00 மணிக்கு சம்பவம் நடைபெற்றிருந்தாலும் நான் 9.50 க்கு தான் சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு சென்றேன் என்றாலும் சரிதான். 3 மணி நேரம் கால தாமதமாக நான் மருத்துவமனைக்கு சென்றிருப்பதால் நானே குடிபோதையில் விழுந்து காயம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

**<u>IN THE COURT OF  JUDICIAL MAGISTRATE,</u>**
**<u>SIRKALI</u>**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**<u>Case No.  C.C. No. 122-2024</u>**

Deposition of Prosecution: P.W-2 , LW 2cross

Name : நாராயணசாமி Defence :

Father Name : கிருஷ்ணன் Court :

Village : அகணி

Taluk :Sirkali

Calling : Religion :

Age : 82/2024

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 14.08.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

எங்களுக்கும் பக்கத்து வீட்டு பாரிவேந்தனுக்கும் குப்பை கொட்டுவதில் பிரச்சனை உண்டு என்றால் சரிதான். சம்பவத்தன்று என் மனைவி குப்பையை பாரிவேந்தன் வீட்டில் கொட்டினார் என்றால் சரியல்ல. இரவு குப்பை கொட்டுவது சம்மந்தமாக பாரிவேந்தன் சண்டை போடுவதாக நான் என் மகனை வரச்சொன்னேன் என்றால் சரிதான். சண்டை நடந்து முடிந்த பிறகு மருத்துவமனைக்கு அழைத்து செல்ல என் பேரன் வந்தான் என்றால் சரிதான். அதனால் என் பேரன் சிவாவுக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்தது இரவு நேரம் என்றால் சரிதான். இரவு நேரம் என்பதால் எனக்கு கண்பார்வை சரியாக தெரியாது என்பதால் என் தலையில் யார் அடித்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என் மகனுக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் சரிதான். என் மகன் கொத்தனார் வேலை முடித்து விட்டு காலையில் என் மனைவிக்கும் எதிரிக்கும் ஏற்பட்ட சண்டை சம்மந்தமாக என் மகன் தான் இரவில் எதிரியை தாக்க சென்றார் என்றால் சரியல்ல. அப்போது ஏற்பட்ட தள்ளுமுள்ளில் என் மகன்தான் என்னை தாக்கினார் என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு மூன்று நபர்கள் அழைத்து சென்றார்கள். எனக்கு தலையில் அடிப்பட்டதால் சுயநினைவில்லை.

மருத்துவரிடமும் போலிசாரிடமும் யார் என்னை அடித்தது என்று என்னால் சொல்ல இயலவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. எதிரி வெளிநாடு செல்வது எனக்கும் என் மகனுக்கும் பிடிக்காமல் அதை தடுக்க அவர் மீது பொய்யாக வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிகக்ப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. C.C. No. 122-2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: | P.W-3 , LW 4cross |
| Name | : சிவா | Defence | : |
| Father Name | : மோகன் | Court | : |
| Village | : அகணி | | |
| | | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : 24/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 14.08.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் போலிசாரிடம் புகார் கொடுத்தது நான்தான். சாட்சி லோகேஷ்வரன் என் நண்பர் என்றால் சரிதான். விஸ்வநாதன் என்பவரை சாட்சியாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் தந்தைக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் சரிதான். என் தாத்தா வீடும் என் வீடும் பக்கத்து பக்கத்து தெருவில் உள்ளது என்றால் சரிதான். தாத்தா வீட்டிற்கு அருகில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது நான் கடைக்கு போயிருந்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்து முடிந்த பிறகு தான் லோகேஷ் என்பவர்தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். வேலிப்பிரச்சனை உள்ளதால் எதிரிக்கும் என் தாத்தாவிற்கும் பிடிக்காமல் விரோதம் உள்ளது என்றால் சரிதான். எதிரி வெளிநாடு செல்ல இருப்பதால் அவரிடம் என் தந்தையும் தாத்தா பாட்டியும் பிரச்சனை செய்து எதிரி வெளிநாடு செல்வதை தடுப்பதற்காக நான் பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**

**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**<u>Case No. C.C. No. 122-2024</u>**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: | P.W-4 , LW 3chief & cross |
| Name | : Rajalakshmi | Defence | : |
| Husband Name | : Narayanan | Court | : |
| Village | : அகணி | | |
| | | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : 67/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 14.08.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 முதல் 3 வரையிலானவர்கள் என் கணவர், என் மகன், என் பேரன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 19.3.2024 ம் தேதி விடியற்காலையில் 7.00 மணியளவில் நான் குப்பையை கூட்டி ஒதுக்கினேன். ஆஜர் எதிரி ஏன் எங்கள் இடத்தில் ஒதுக்குகிறாய் என்று கேட்டார். நான் அள்ளி விடுகிறேன் என்று சொன்னேன். ஆனாலும் என்னை அசிங்கமாக திட்டினார். அதற்கு நானும் திட்டினேன். திட்டிவிட்டு நான் என் கணவர், என் பேரன், என் மகன் வந்தவுடன் நான் நடந்த விவரத்தை சொன்னேன். எனது மகனும் என் கணவரும் ஆஜர் எதிரியிடம் ஏன் இவ்வாறு செய்தாய் என்று நியாயமாக கேட்க சென்றபோது, போதையில் இருந்த ஆஜர் எதிரி, அரிவாளால் என் கணவரின் வலது கையில் வெட்டினார், தலையில் இரும்பு கம்பியால் அடித்து காயம் ஏற்பட்டது. அதன் பின்னிட்டு என் மகனையும் இரும்புகம்பியால் அடித்து தலை மற்றும் கையில் காயம் ஏற்பட்டது. அருகில் இருந்தவர்கள் வேடிக்கை பார்த்தார்கள். யாரும் தடுக்கவில்லை. 2 நாட்களாக அசிங்கம் அசிங்கமாக திட்டிக்கொண்டிருந்தார். என் பேரன் வந்து மருத்துவமனைக்கு என் மகனையும் கணவரையும் அழைத்து சென்றார். எனது கணவரையும் மகனையும் மட்டும் தான் போலிசார் விசாரித்தார்கள். என்னை

விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு காதும் சரியாக கேட்காது, கண்ணும் சரியாக தெரியாது என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிக்கும் குப்பை கொட்டுவதில் தொடர்ந்து பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் வேலி ஓரமாக குப்பையை ஒதுக்கினேனா என்றால் இல்லை. வயலில் ஒதுக்கினேன். எதிரி எப்போதும் எங்களிடம் சண்டை போடும் பழக்கம் இல்லை என்றால் சரிதான். எங்கள் வீட்டைச் சுற்றி வேலி அடைக்கவில்லை என்றால் சரிதான். என் கணவருக்கு குடிப்பழக்கம் உண்டு, என் மகனுக்கு குடிப்பழக்கம் உண்டா என்பது பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தன்று மாலை நான் சொல்லி தான் என் மகனும் என் கணவரும் எதிரியிடம் சென்று கேட்டு சண்டை போட்டார்கள் என்றால் சரிதான். எதிரியிடம் சண்டை போட சென்றபோது என் மகன் தான் எதிரியை தாக்கி அதை தடுக்க சென்ற என் கணவருக்கும் என் மகனால் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இருட்டு நேரம் என்பதால் எனக்கு கண் சரியாக தெரியாது என்பதால் யார் யாரை தாக்கியது என்று என்னால் சொல்ல இயலாது என்றால் சரியல்ல. எனக்கு சரியாக காது கேட்காது என்பதால் யார் என்ன திட்டினார்கள் என்று எனக்கு சொல்ல முடியாது என்றால் சரியல்ல. நான் தான் போன் செய்து என் கணவரையும் மகனையும் வரவழைத்து தூண்டி விட்டு எதிரியின் வீட்டிற்கு சென்று சண்டை சம்பவம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் கணவருக்கு என் மகனுக்கும் குடிப்பழக்கம் உள்ளதால் அவர்கள் தான் எதிரியை தாக்கினார்கள் என்றால் சரியல்ல. எதிரி வெளிநாடு செல்வதை தடுப்பதற்காக நாங்கள் பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**

**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**<u>Case No. C.C. No. 122-2024</u>**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: | P.W-5 , LW 5chief & cross |
| Name | : Logeshwaran | Defence | : |
| Father Name: | Ashok kumar | Court | : |
| Village | : அகணி | | |
| | | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : 18/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 14.08.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து ஆக வேலை செய்து வருகிறேன். சாட்சிகளையும் ஆஜர் எதிரியையும் எனக்கு தெரியும். மலர்க்கண்ணன் மகன் விஸ்வநாதன் எனக்கு தெரியும். கடந்த 19.3.2024 ம் தேதி இரவு 8.30 மணிக்கு சீர்காழி அரசு மருத்துவமனைக்கு என் தாத்தாவையும் என் நண்பரின் தகப்பனார் மோகன் என்பவரையும் சிகிச்சைக்காக அழைத்து சென்றிருந்தேன். அங்கு வைத்து இந்த வழக்கிற்கு சாட்சியாக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். கையெழுத்து செய்த பேப்பரில் உள்ள விவரம் எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்துகளில் இரண்டாவது கையெழுத்து என்னுடையது. **அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 20.03.2024-ம் தேதி மதியம் சுமார் 03.00 மணியளவில் நானும் என் நண்பர்

விஸ்வநாதன்  என்பவரும் அகனி தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தபோது முந்தைய நாள் நடந்த  இந்த வழக்கு  சம்பந்தமாக  சீர்காழி  போலிசார் வழக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த  வரைப்படம் மற்றும் பார்வை மகசரில் சாட்சியாக நானும் விஸ்வநாதன் என்பவரும்  கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. தற்போது கையெழுத்தை மட்டும் ஒப்புகொண்டு  மேற்படி விவரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி  எனது ஊர்க்காரர்  என்பதால் எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என் நண்பரின் தகப்பனாருக்காக போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க மருத்துவமனையில் வைத்து  சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். என் நண்பருக்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**